ஆண்டு பட்டிகை வழக்கு எண்.25/2024

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 25/2024 LW- 4 PW- 1

| | |
|---|---|
| Name | : செல்வமாறன் ( ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| Father's/Husband's Name | : காத்தமுத்து |
| Village | : பொன்னகரம் |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 67/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 03:04 P.M. - 03:14 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து கடந்த 2015ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2000ம் ஆண்டு ஜுலை மாதம் ஒரு நாள் ஆஜர் எதிரியை நத்தம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது நானும், என்னுடன் பணிபுரிந்த கிராம உதவியாளர் பொம்மானி என்பவரும் உடன் இருந்தோம். விசாரணையின்போது ஆஜர் எதிரி குறைவான விலையில் மதுபாட்டில்களை வாங்கி வந்து வெளியில் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக கூறினார்கள்.

2. பின்னர் போலீசார் எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அப்போது நானும், பொம்மானி என்பவரும் அந்த அத்தாட்சியிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்திட்டோம். **(எதிரி சிவஞானம் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை . எனவே அ.சா.1ன் சாட்சியம் முடிக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. UDAYA SURIYA — Digitally signed by V. UDAYA SURIYA Date: 2024.07.16 10:26:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 25/2024 LW- 6 PW- 2

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.25/2024

| | |
|---|---|
| Name | : பாண்டி ( ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| Father's/Husband's Name | : கருப்பணன் |
| Village | : அஞ்சுகுழிபட்டி |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 60/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 03:15 P.M. - 03:24 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி லெட்சுமண பெருமாள் என்பவரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். இந்த கையெழுத்துக்களை நான் எப்போது போட்டேன் என்று ஞாபகமில்லை. (**எதிரி லெட்சுமண பெருமாள் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>2) அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதியின்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) போலீசார் விசாரணையில் கடந்த 10.07.2000 ம் தேதி காலை 9.00 மணிக்கு நானும், அப்பாஸ் என்பவரும் நத்தம் பேருந்து நிலையத்தில் இருந்தபோது, நத்தம்

காவல் நிலைய ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் எதிரி லெட்சுமண பெருமாள் என்பவரை விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது எதிரி லெட்சுமண பெருமாள் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் மதுரை ஹார்விபட்டியிலுள்ள எதிரியின் வீட்டு முன்பு வைத்து போலீசாரிடம் எதிரி ஒப்படைத்த 180 ML Monitor விஸ்கி பாட்டில்கள் 2 ஐயும், 180ML அளவுள்ள Old Monk XXX Rum பாட்டில்கள் 2 ஐயும் போலீசார் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைபற்றினார்கள் என்றால் சரியல்ல.

3) அவ்வாறே ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நானும், அப்பாஸ் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு , எதிரி லெட்சுமண பெருமாள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**</u>

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.07.16 10:26:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.25/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 35/2024 LW- 2 PW- 2

Name : காட்டுபாவா (கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : சர்க்கரை முகமது

Village : தெற்கு தெரு

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 40/2024

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of June 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:12 A.M. - 11:18 A.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியாது. ஆஜர் எதிரியை பார்த்துள்ளேன், சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் நான் மதுரைக்கு சென்று கொண்டிருந்தபோது, இடையப்பட்டி விலக்கு அருகே கூட்டமாக இருந்தது. நான் எட்டிப் பார்த்தபோது ஆஜர் எதிரி கீழே படுத்துகிடந்தார். எனவே ஆஜர் எதிரியின் பக்கத்து வீட்டுக்காரரும், எனது நண்பருமான குமார் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் குறுக்கு விசாரணை.**

**2.** போலீஸ் விசாரணையில் கடந்த 01.12.2023ம் தேதி மாலை சுமார் 5.45 மணியளவில் மதுரையிலிருந்து நத்தம் செல்லும் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்காக இடையப்பட்டி பால்பண்ணை பிரிவு அருகே உள்ள ரோட்டில் ஆஜர் எதிரி ஆண்டிச்சாமி, முத்து என்பவரை அழைத்துக் கொண்டு எதிரிக்கு சொந்தமான TN 57 AE 3264 என்ற பதிவு எண் கொண்ட Splender இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதால் நாய் குறுக்கே வந்தவுடன் விபத்து ஏற்படுத்தி கீழே தடுமாறி விழுந்ததாகவும் அதனால் முத்து என்பவருக்கு தலையின் இடது பக்கத்தில் பலத்த ரத்தக் காயமும் இடது கை முட்டி, இடது கணுக்கால் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயமும், ஆஜர் எதிரிக்கு இடது கால் முட்டி, இடது கால் பெருவிரல் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு இருந்தது. அவர்கள் இருவரையும் 108 அவசர ஊர்தியில் ஏற்றி, நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி முத்து என்பவர் மயக்க நிலையில் பேச முடியாமல் இருந்ததால் மேற்படி சம்பவம் தொடர்பாக நானும், என்னுடன் இருந்த அரவிந்த் என்பவரும் முத்துவின் மனைவி பஞ்சவர்ணம் என்பவருக்கு விபரம் சொன்னோம் என்றும், பின்னர் முத்து என்பவர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மேல் சிகிச்சையில் இருந்தபோது சிகிச்சை பலனின்றி 04.12.2023ம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.07.16 10:27:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.35/2024

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 35/2024 LW- 4 PW- 3

Name : சிவா (கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : சின்னச்சாமி

Village : இடையப்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 27/2024

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of June 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:18 A.M. - 11:22 A.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். சுமார் 3, 4 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் இடையப்பட்டி விலக்கு அருகே ஆஜர் எதிரியையும், மற்றொரு நபரையும் கீழே விழுந்து கிடந்தவர்களை 108 அவசர ஊர்தியில் ஏற்றியபோது, நான் அருகில் நின்று கொண்டிருந்தேன். ஆஜர் எதிரியும், மற்றொரு நபரும் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார்கள். நான் அந்த இருசக்கர வாகனத்தை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் குறுக்கு விசாரணை.**

**2.** போலீஸ் விசாரணையில் கடந்த 01.12.2023 ம் தேதி மாலை சுமார் 5.45 மணியளவில் மதுரையிலிருந்து நத்தம் செல்லும் பைபாஸ் சாலையில் தெற்கிலிருந்து வடக்காக இடையப்பட்டி பால்பண்ணை பிரிவு அருகே உள்ள ரோட்டில் ஆஜர் எதிரி ஆண்டிச்சாமி, முத்து என்பவரை அழைத்துக் கொண்டு எதிரிக்கு சொந்தமான TN 57 AE 3264 என்ற பதிவு எண் கொண்ட Splender இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதால் நாய் குறுக்கே வந்தவுடன் விபத்து ஏற்படுத்தி கீழே தடுமாறி விழுந்ததாகவும் அதனால் முத்து என்பவருக்கு தலையின் இடது பக்கத்தில் பலத்த ரத்தக் காயமும் இடது கை முட்டி, இடது கணுக்கால் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயமும், ஆஜர் எதிரிக்கு இடது கால் முட்டி, இடது கால் பெருவிரல் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு இருந்தது. அவர்கள் இருவரையும் 108 அவசர ஊர்தியில் ஏற்றி, நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தோம் என்றால் சரியல்ல.

3. பின்னர் முத்து என்பவர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மேல் சிகிச்சையில் இருந்தபோது சிகிச்சை பலனின்றி 04.12.2023 ம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.07.16 10:27:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.35/2024

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 35/2024 | LW- 6 | PW- 4 |

| | |
|---|---|
| Name | : கணேசன் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னையா |
| Village | : சிறுகுடி, புதுப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 46/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of July 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:57 A.M. - 12:02 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் சடையம்பட்டி அருகே கோழித் தீவனம் ஏற்றிச் சென்ற வாகனம் கவிழ்ந்து விபத்து நடந்தது சம்பந்தமாக போலீசார் விசாரித்தபோது, நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது. **(பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்..

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் குறுக்கு விசாரணை.**

**2.** போலீஸ் விசாரணையில் கடந்த 05.12.2023ம் தேதி காலை 8.45 மணியளவில் நானும், வேல்மணி என்பவரும் சம்பவ இடமான நத்தம் – மதுரை செல்லும் பைபாஸ் சாலை அருகே நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சியாக கையெழுத்து கேட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு பார்வை மகஜரில் நத்தம் – மதுரை செல்லும் சாலையில் இடையப்பட்டி பால்பண்ணை முன்பாக வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.07.16 10:27:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.35/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 35/2024 LW– 3 PW– 5

Name : அரவிந்த் (கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : பெரியகருப்பன்

Village : துவராபதி, வேலம்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 24/2024

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:18 A.M. - 11:30 A.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்துசென்னையில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. சுமார் 7 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் காலையில் என் மாமா முத்து என்பவருக்கு விபத்து ஏற்பட்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு மருத்துவமனை சென்று பார்த்தேன். அவருக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் இருந்தது. அவர் 3 நாட்கள் கழித்து மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி விபத்தானது நத்தத்தில் இருந்து மதுரை செல்லும் சாலையில் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் குறுக்கு விசாரணை.**

**2.** போலீஸ் விசாரணையில் கடந்த 01.12.2023ம் தேதி காலை 5.45 மணியளவில் நத்தம் – மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் இடைப்பட்டி பால்பண்ணை பிரிவு அருகே நான் மதுரையிலிருந்து வந்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது என் அக்காவின் மாமனார் முத்து என்பவர் வேலம்பட்டி கிராமம், கந்தசாமி நகரைச் சேர்ந்த குன்னக்குடியான் மகன் ஆண்டிச்சாமி என்பவர் மதுரைக்கு சென்றுவிட்டு, ஆண்டிச்சாமிக்கு சொந்தமான TN 57 AE 3264 என்ற ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்கள் என்றால் ஆமாம். இருசக்கர வாகனத்தில் அவர்கள் தெற்கிலிருந்து வடக்காக மாலை சுமார் 5.45 மணியளவில் இடையப்பட்டி பால்பண்ணை பிரிவு அருகே உள்ள சாலையில் ஆண்டிச்சாமி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வரும்போது நாய் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டதா என்றால் ஆமாம்.

3. அதனால் ஆண்டிச்சாமியும், முத்துவும் நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் ஆமாம். அப்போது நானும், காட்டுபாவா என்பவரும் ஓடிப்போய் அவர்களை தூக்கிப பார்த்தபோது முத்து என்பவருக்கு தலையின் இடது பக்கத்திலும், இடது கை மொலி மற்றும் இடது கணுக்காலில் ரத்தக் காயம் மற்றும் சிராய்ப்பு காயங்களும், ஆண்டிச்சாமிக்கு இடது கால் மொலி, இடது கால் பெருவிரல் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்ததா என்றால் நான் அப்போது மதுரையிலிருந்தேன். அவரை நான் அப்போது தூக்கவில்லை. காயம்பட்டவர்களை நானும், அருகில் இருந்தவர்களும் 108 அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்த பின்பு முத்து என்பவர் பேச முடியாமல் இருந்ததால் மேற்படி விபத்து சம்பந்தமாக நானும், என்னுடன் இருந்த காட்டுபாவா என்பவரும் முத்துவின் மனைவி

**பஞ்சவர்ணம் என்பவரிடம் விபரம் சொன்னோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து சம்பவத்தை பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.07.16 10:27:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்